அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026
கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

ஆண்டாள் -பன்முகப் பார்வை

Andal- Multiple Perspectives

Dr M. Rani, *Head, Department of Language, Nazareth College of Arts and Science, Avadi, Chennai - 62.*

முனைவர் ம. இராணி, துறைத்தலைவர், மொழித்துறை, நாசரேத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆவடி, சென்னை-62.

Abstract:

Aṇḍal occupies a unique place in the history of Tamil devotional literature. She is the only female Azhvar among the twelve Azhvars. Through her works Tiruppavai and Nachiyar Tirumozhi, Aṇḍal attained an enduring reputation in the Tamil Vaiṣṇava literary tradition. Although she has traditionally been regarded as the embodiment of devotion, modern scholarship has approached her from a variety of new perspectives. Feminist, sociological, literary, cultural and psychological approaches examine not only her devotion but also the diverse ideas and deeper meanings embedded in her works. This article explores these multiple dimensions of Aṇḍal's literary and devotional contributions.

Keywords: *Tamil Devotional Literature, Twelve Azhvars,* ***Tiruppavai****,* ***Nachiyar Tirumoḻi****, Vaiṣṇava Literature, Feminism, Cultural Studies, Psychological Approach and Interdisciplinary Studies.*

ஆய்வுச் சுருக்கம் :

பக்தி இலக்கிய வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றவர் ஆண்டாள், பன்னிரு ஆழ்வார்களில் ஒரே பெண் ஆழ்வாராகத் திகழ்ந்தவர். ஆண்டாள் திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி ஆகிய படைப்புகளால் வைணவ தமிழ் இலக்கியத்தில் நிலையான புகழைப் பெற்றவர். மரபு வழியாக ஆண்டாள்பக்தியின் வடிவமாகக் கருதப்பட்டாலும் நவீன காலத்தில் அவரைப் பற்றிய ஆய்வுகள்பல்வேறு புதிய கோணங்களிலும் நடைபெற்று வருகின்றன. பெண்ணியம், சமூகவியல், இலக்கியவியல், கலாச்சாரவியல், உளவியல் அணுகுமுறை அவருடைய பக்தியை மட்டுமல்லாமல் அவரது படைப்புகளில் மறைந்துள்ள பல்வேறு சிந்தனைகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

திறவுச் சொற்கள்: *தமிழ் பக்தி இலக்கியம், பன்னிரு ஆழ்வார்கள், திருப்பாவை, நாச்சியார் திருமொழி, வைணவ இலக்கியம், பெண்ணியம், பண்பாட்டியல் ஆய்வு, உளவியல் அணுகுமுறை, பல்துறை ஆய்வு.*

முன்னுரை

தமிழகத்தில் கி.பி. 6-9 ஆம் நூற்றாண்டுகள் பக்தி இயக்கத்தின் எழுச்சிக் காலமாகும். சமணமும் பௌத்தமும் வலுவாக இருந்த சூழலில், சைவ மற்றும் வைணவ பக்தி இயக்கங்கள் மக்களிடையே புதிய ஆன்மிக உணர்வை ஏற்படுத்தின. பக்தி என்பது இறைவனிடம் அன்பு செலுத்தும் எளிய வழியாக மக்களிடம் பரவியது. இக்காலத்தில் வாழ்ந்த பன்னிரு ஆழ்வார்களின் பாடல்கள் பின்னர் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் என்ற பெயரில் தொகுக்கப்பட்டன. இவற்றில் ஆண்டாளின் திருப்பாவை (30 பாசுரங்கள்) மற்றும் நாச்சியார் திருமொழி (143 பாசுரங்கள்) முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. அக்காலச் சமூகத்தில் பெண்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், ஆண்டாள் தனது விருப்பத்தையும் ஆன்மிகத் தேர்வையும் வெளிப்படையாகப் பதிவு செய்தார். இதுவே அவரை மற்ற பக்திப் புலவர்களிடமிருந்து வேறுபடுத்துகிறது.

ஆண்டாளின் வாழ்க்கை வரலாறு

ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆடிப்பூரத்தன்று பெரியாழ்வாரால் துளசி செடிகளுக்கிடையே கண்டெடுக்கப்பட்ட குழந்தை ஆண்டாள். பெரியாழ்வார் குழந்தைக்கு கோதை என்று பெயரிட்டார். கோதை சிறு வயதிலிருந்தே திருமாலின் மீது அளவற்ற பக்தி கொண்டிருந்தார்.

பெரியாழ்வார் தினமும் பெருமாளுக்காகத் தயாரித்த மலர்மாலையை முதலில் தானே அணிந்து கண்ணாடியில் பார்த்துவிட்டு மீண்டும் கழற்றி வைத்தார். இதை அறிந்த பெரியாழ்வார் வருந்தினார். ஆனால், இறைவன் கனவில் தோன்றி, கோதை அணிந்த மாலையே தனக்கு உகந்தது என்றார். இதனால் ஆண்டாள் **"சூடிக்கொடுத்த சுடர்க்கொடி"** *என்ற பெருமையைப் பெற்றார்.*

தொல்காப்பியமும் ஆண்டாள் பாடல்களும்

ஆண்டாளின் திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி ஆகிய பாடல்கள் நேரடியாக தொல்காப்பியத்தை மேற்கோள் காட்டவில்லை. ஆனால், தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் கூறப்படும் அகப்பொருள், மெய்ப்பாடு, திணை, காதல் மரபுகள் ஆகியவை ஆண்டாளின் பாடல்களில் ஆழமாக வெளிப்படுகின்றன. .

"மெய்யிற்படுதல் மெய்ப்பாடு."

தொல்காப்பியர் மனத்தில் தோன்றும் உணர்வு உடலில் வெளிப்படுவதே மெய்ப்பாடு என்கிறார். ஆண்டாள், திருமாலுடன் திருமணம் நடைபெறுவதாகக் கனவு காணும் மகிழ்ச்சியை **"வாரணம் ஆயிரம்"** பாசுரத்தில் உணர்ச்சிப்பூர்வமாக வெளிப்படுத்துகிறார். இது தொல்காப்பிய மெய்ப்பாட்டுக் கோட்பாட்டிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஆண்டாள் காதலும் திருக்குறளும்

ஆண்டாள் பெருமாள் மீது கொண்ட தூய பக்தியையும், காதலையும் நாச்சியார் திருமொழி மற்றும் திருப்பாவை வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். அவரது காதல் ஏக்கத்தையும், பிரிவின் துயரத்தையும் திருக்குறள் காமத்துப்பால் பாடல்கள் மிகச்சரியாக விவரிக்கின்றன

"நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல

அஞ்சுதும் வேபாக் கறிந்து"1

என் காதலன் எப்போதும் என் நெஞ்சில்தான் இருக்கிறான். அப்படிப்பட்டவனை நான் துன்புறுத்த விரும்பவில்லை. ஆதலால், என் நெஞ்சில் அவன் சூடேறிவிடுவான் என்று அஞ்சி நான் வெதுவெதுப்பான உணவைக்கூட உண்பதில்லை

காதலரின் இதயத்தில் உறைதல்தன் காதலன் எப்போதும் தன் நெஞ்சில் மட்டுமே இருக்கிறான் என்பதை உணர்ந்த ஆண்டாளின் நிலையை இந்தக்குறள் விளக்குகிறது.

ஆண்டாளைப் பற்றிய மரபுப் பார்வை

வைணவ மரபில் ஆண்டாள், பூதேவியின் அவதாரமாகக் கருதப்படுகிறார். பெரியாழ்வாரால்வளர்க்கப்பட்ட அவர், சிறுவயதிலிருந்தே திருமாலைத் தனது மணாளனாக எண்ணி வாழ்ந்தார்.இறைவனுக்குச் சூட்டப்பட வேண்டிய மாலையை முதலில் தானே அணிந்து பார்த்த சம்பவம்,அவரது இறையன்பின் அடையாளமாக விளக்கப்படுகிறது. இதன் மூலம் ஆண்டாள் பக்தியின் உச்சநிலையை அடைந்தவராக மதிக்கப்படுகிறார்

"மானிடவர்க்கென்று பேச்சுப்படில்

வாழகில்லேன் கண்டாய் மன்மதனே."2

இப்பாசுரம், இறைவனைத் தவிர வேறு யாரையும் மணக்க விரும்பாத அவரது உறுதியையும் ஆன்மிகக் காதலையும் வெளிப்படுத்துகிறது.

மரபு விளக்கங்களில் ஆண்டாளின் வாழ்க்கை முழுவதும் பக்தியின் வரலாறாகவே சித்தரிக்கப்படுகிறது. ஆனால், நவீன ஆய்வாளர்கள் இந்த நிகழ்வுகளை இலக்கியச்சின்னங்கள், குறியீடுகள் மற்றும் கலாச்சார வெளிப்பாடுகள் என்ற கோணத்திலும்ஆராய்கின்றனர்.

நவீன இலக்கியப் பார்வையில் ஆண்டாள்

இலக்கிய ஆய்வாளர்கள் ஆண்டாளின் படைப்புகளை வெறும் சமய நூல்களாக மட்டும் கருதுவதில்லை. அவரது பாடல்களில் கவித்துவம், கற்பனை, உவமை, இயற்கைச் சித்திரிப்பு,உளவியல் உணர்வு, மொழிநயம் ஆகியவை மிக உயர்ந்த இலக்கியத் தரத்தில் அமைந்துள்ளன.திருப்பாவை எளிமையான தமிழில் எழுதப்பட்டிருந்தாலும், அதன் பின்னணியில் சங்கஇலக்கிய மரபு, வேதாந்தச் சிந்தனை மற்றும் நாட்டுப்புறப் பண்பாட்டு கூறுகள்இணைந்துள்ளன. நாச்சியார் திருமொழி காதல் இலக்கியத்தின் அழகையும் பக்தியின்ஆழத்தையும் ஒருங்கிணைக்கிறது.இதனால் ஆண்டாள் பக்திக் கவிஞராக மட்டுமல்லாமல், உயர்ந்த இலக்கியப்படைப்பாளராகவும் மதிக்கப்படுகிறார்.

பெண்ணிய நோக்கில் ஆண்டாள்

நவீன ஆய்வுகளில் அதிகம் பேசப்படும் துறைகளில் ஒன்று பெண்ணியப் பார்வையாகும்.ஆண்டாள் தனது உணர்வுகளை எந்தவித தயக்கமுமின்றி வெளிப்படுத்துகிறார். அவர்இறைவனை விரும்புவதாகவும், அவரையே மணக்க விரும்புவதாகவும் நேரடியாகக் கூறுகிறார். இது பெண்களின் குரல் ஒடுக்கப்பட்டிருந்த காலத்தில் மிகவும் துணிச்சலான வெளிப்பாடாகக்கருதப்படுகிறது.

நாச்சியார் திருமொழியில் வரும்

"வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து..."3

பெண்ணின் திருமணக் கனவை அவளது கண்ணோட்டத்தில் வெளிப்படுத்துகின்றன. பெண்ணிய ஆய்வாளர்கள் ஆண்டாளை, தனது விருப்பத்தைத் தானே அறிவிக்கும் பெண்குரலாகக் காண்கின்றனர். அதே நேரத்தில் சிலர், அவரது விருப்பம் இறையன்பின் எல்லைக்குள் இருப்பதால் அது முழுமையான சமூகப் புரட்சியாகக் கருதப்பட முடியாது என்றும்வாதிடுகின்றனர். இந்த இரு அணுகுமுறைகளும் ஆண்டாள் ஆய்வில் முக்கிய இடம்பெறுகின்றன.

சமூகப் பார்வையில் ஆண்டாள்

ஆண்டாளின் பாடல்களில் சமூக ஒற்றுமை, சமத்துவம், பகிர்வு, ஒழுக்கம் போன்ற கருத்துகள்தெளிவாகக் காணப்படுகின்றன. திருப்பாவையில் அவர் தனியாக வழிபடவில்லை;தோழிகளை அழைத்து அனைவரும் ஒன்றிணைந்து நோன்பு நோற்க வேண்டும் என்றுகூறுகிறார். இது கூட்டுச் சமூகத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

"வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்கு."4

என்ற அழைப்பின் மூலம் சமூக வேறுபாடுகளைத் தாண்டிஅனைவரையும் இறைவழிபாட்டில் இணைக்கிறார். இந்த அணுகுமுறை சமகாலச் சமூகஒற்றுமைக்கும் பொருந்தக்கூடியதாகும்.

உளவியல் நோக்கில் ஆண்டாள்

ஆண்டாளின் பாடல்கள் மனித மனத்தின் ஆழமான உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன.ஆசை, ஏக்கம், நம்பிக்கை, பிரிவு, மகிழ்ச்சி, கனவு போன்ற மனநிலைகள் அவரது பாடல்களில்இயல்பாகப் பதிவாகியுள்ளன.

“கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ ” 5

போன்றபாடல்கள் காதல், ஏக்கம், காத்திருப்பு போன்ற பெண்ணின் உளவியல் உணர்வுகளை ஆழமாகஎடுத்துரைக்கின்றன.இறைவனை அடைய முடியாத ஏக்கமும், அவருடன் இணையும் பேரின்பமும் உளவியல் அனுபவங்களாக விளக்கப்படுகின்றன. பக்தி என்பது மன அமைதிக்கான வழியாகவும்ஆண்டாளின் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

இயற்கைச் சிந்தனையில் ஆண்டாள்

ஆண்டாளின் பாடல்களில் இயற்கை ஒரு பின்னணிக் காட்சியாக மட்டுமல்ல; உயிருள்ளபங்கேற்பாளராக விளங்குகிறது. பறவைகள், மலர்கள், மழை, ஆறுகள், மாடுகள், விடியல், நிலா,சூரியன் போன்ற இயற்கைக் கூறுகள் வழிபாட்டின் ஒரு பகுதியாகச் சித்தரிக்கப்படுகின்றன.

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி,

நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்..."6

இந்தப் பாசுரம் இறைவனைப் போற்றுவதன் மூலம் உலக நலனும் இயற்கை வளமும் பெருகும் என்ற நம்பிக்கையை எடுத்துரைக்கிறது.

இன்றைய சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள், இயற்கையுடன் இணைந்து வாழும் வாழ்க்கைமுறையை ஆண்டாள் வலியுறுத்தியதாகக் கருதுகின்றனர். சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றியநவீன கருத்துகளுடன் அவரது இயற்கை உணர்வு ஒப்பிடப்படுகிறது.

கலாச்சாரப் பார்வையில் ஆண்டாள்

மார்கழி மாத வழிபாடு, பாவை நோன்பு, பூமாலை அணிவித்தல், தோழியர் கூட்டம், இசை,நாட்டுப்புற மரபுகள் ஆகியவை ஆண்டாளின் பாடல்களில் கலாச்சார ஆவணங்களாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்; "7

இன்றும் தமிழகம் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் வாழும் தமிழர்களால் திருப்பாவைபாடப்படுவது, ஆண்டாளின் கலாச்சாரச் செல்வாக்கை எடுத்துக்காட்டுகிறது.

நவீன ஆய்வாளர்களின் கருத்துகள்

பல்வேறு ஆய்வாளர்களின் மதிப்பிடு

- மு. வரதராசன், ஆண்டாளைப் பக்தி இலக்கியத்தின் உச்சநிலைக் கவிஞராகக் குறிப்பிடுகிறார்
- டாக்டர் மா. இராசமாணிக்கனார், அவரது தமிழ்மொழி ஆளுமையையும் இலக்கிய நயத்தையும் வலியுறுத்துகிறார்.
- சமூகவியல் ஆய்வாளர்கள், திருப்பாவையில் காணப்படும் கூட்டுப் பங்கேற்பு சமூகஒற்றுமையை வளர்க்கும் கூறாகக் கருதுகின்றனர்.

ஆண்டாளைச் சுற்றியுள்ள சமகால விவாதங்கள் கடந்த சில தசாப்தங்களில் ஆண்டாளின் வாழ்க்கை, வரலாறு மற்றும் இலக்கியம் குறித்துபல்வேறு விவாதங்கள் நடைபெற்றுள்ளன. சில ஆய்வாளர்கள் ஆண்டாளை வரலாற்று நபராகஅணுகுகின்றனர்; சிலர் அவர் புராண மரபின் அடையாளம் என்றும் கருதுகின்றனர். மேலும்,அவரது பாடல்களை மத நூல்களாக மட்டுமல்லாமல், இலக்கியம் மற்றும் கலாச்சார வரலாற்றின் முக்கிய ஆதாரங்களாகவும் ஆய்வு செய்ய வேண்டும்.

இந்த ஆய்வு ஆண்டாளின் பெருமையைக் குறைப்பதற்காக அல்ல; மாறாக, அவருடைய படைப்புகளைப் பல்வேறு கல்வியியல் கோணங்களில் புரிந்துகொள்வதற்கான முயற்சி.

ஆண்டாளின் சமகாலப் பொருத்தம்

இன்றைய உலகிலும் ஆண்டாளின் சிந்தனைகள்

- பெண்களின் தன்னம்பிக்கை மற்றும் குரல்.
- சமுதாய ஒற்றுமை மற்றும் கூட்டு வாழ்வு.
- இயற்கையை நேசிக்கும் பண்பு.
- ஆன்மிகத்தின் மூலம் மன அமைதி.
- பண்பாட்டு மரபுகளைப் பாதுகாக்கும் பொறுப்பு.

- இலக்கியத்தின் மூலம் மனிதநேயத்தை வளர்த்தல்.

எனவே ஆண்டாள் ஒரு சமயப் புலவர் மட்டுமல்ல; காலந்தோறும் புதிய பொருள்களை வழங்கும் உலகத் தரமான சிந்தனையாளர்.

கோதை மண்டலி

ஆண்டாள் இயற்றிய பாடல்களைத் தொலைக்காட்சி மற்றும் வானொலியில் நிகழ்ச்சிகளின் மூலம் பரப்புவதை நோக்கமாகக் கொண்ட 'கோதை மண்டலி' அமைப்பு 1970-ல் தொடங்கப்பட்டு, 1982-ல் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக ஆனது.8

ஆண்டாளுக்கு அஞ்சலி

கிருஷ்ணதேவராயர் 'ஆயுக்தா மால்யதா'(சூடிக்கொடுத்தவள்) என்ற பெயரில் தெலுங்கில் ஆண்டாளுக்கு ஒரு காவியம் இயற்றியுள்ளார். அழகிய சொக்கநாத பிள்ளை என்பவர் 'கோதை கும்மி','கோதை அந்தாதி' என்ற இரண்டு பிரபந்தங்கள் இயற்றி ஆண்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.9

மறைவு

விஷ்ணுசித்தரின் கனவில் ஸ்ரீரங்கத்தின் ரங்கநாதர் திருமணத்திற்கு ஒப்புதல் அளிக்க அவர் ஆண்டாளைப் பல்லக்கில் ஏற்றிக் கொண்டு ஸ்ரீரங்கம் வரைச் சென்றார். மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து ஸ்ரீரங்கம் வரை அலங்காரம் செய்தார். காவிரியின் தென்கரையில் இறங்கி நடந்த ஆண்டாள் பங்குனி உத்திர நாளில் திருவரங்கம் கோயிலை அடைந்து இறைவனுடன் கலந்தார். ஆண்டாள் — பன்முகப் பார்வை என்ற அணுகுமுறை, ஆண்டாளை வெறும் பக்தி மரபிற்குள்மட்டுமே அடைத்து வைக்காமல், பல்துறை ஆய்வுகளின் வெளிச்சத்தில் புரிந்துகொள்ளஉதவுகிறது. அவரது படைப்புகள் பக்தி, காதல், பெண்ணியம், சமூகப் பொறுப்பு, இயற்கைஉணர்வு, கலாச்சார அடையாளம் மற்றும் மனிதநேயம் ஆகியவற்றின் சங்கமமாக ஆண்டாளின் பாடல்களில் இயல்பாகப் பதிவாகியுள்ளன.**அடிக்குறிப்பு**

1. திருக்குறள், களவியல் .1128
2. நாச்சியார் திருமொழி, பாடல் .508
3. நாச்சியார் திருமொழி,பாடல் .556
4. திருப்பாவை,பாடல் .475
5. நாச்சியார் திருமொழி, பாடல் .567

6. திருப்பாவை, பாடல் .476
7. திருப்பாவை, பாடல் .474
8. Tamil wiki, ஆண்டாள். இணையவழிச் செய்தி
9. நாலாயிர திவ்ய பிரபந்தம் ஒரு கண்ணோட்டம், பக்கம் .111

Reference book

1. *Ilampuranar's Urai Tolkappiyam, Porul Athikaram*
   First Edition
   Saradha Publications
   Chennai

2. *Parimelazhagar's Urai, Tirukkural*
   Eighth Edition
   Thirumagal Nilayam
   Chennai

3. *V.P. Purushothaman -Nalayira Divya Prabandham Oru Kannottam*
   First edition
   Sri Bhuvaneswari Publisher
   Chennai

4. *Shri Ram Subramanya Sharma Smt. R.Ponnammal*
   Sri Naalayira Divya Prabandham
   Muthalaayiram book-1
   Kangai book house
   Chennai

5. *Mu. Varadarajanar.*
   Tiruppavai. Chennai
   Pari Nilayam,
   First Edition.

6. *Avvai Su. Duraisamy Pillai.*

Nachiyar Tirumozhi.

Chennai

Saiva Siddhanta Publishing Society (Saiva Siddhanta Noorpathippu Kazhagam),

First Edition.

7. *K. A. Manavalan.*

Aṇḍaḷ.

Sahitya Academy,

First Edition.

Chennai

8. *Tamil wiki,*

Andal, Online News

ARAN International e-Journal of Tamil Research
அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com